**களணி பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

களணி பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் களணி பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள்

மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| தொடர்பு இலக்கம் | அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.2(அ) | 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய 2155/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் விதிக்கப்பட்ட மேல் மாகாண பிரதேச சபை நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதி இலக்கம் 83(ii) இன் பிரகாரம் ஊழியர் கடனுக்காக முற்பண கணக்கொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | முற்பண கணக்கொன்னை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| 1.6.2(உ) | 2020 ஆம் ஆண்டில் கட்டிடம் ரூபா 189,000 இயந்திரம் ரூபா 305,389 தொகை, கணனி ரூபா 973,096 தொகை, அலுவலக உபகரணம் ரூபா 674,351 தொகை, தளபாடங்கள் ரூபா 52,625 தொகை, வீதிகள் மற்றும் பாலங்கள் ரூபா 38,775 ஆக | அகற்றப்படுகின்ற சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வு ஒதுக்கீடுகள் உரிய பிரகாரம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கூட்டுமொத்தமாக ரூபா 2,233,236 தொகை நிலையான சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் அதற்கான பெறுமானத்தேய்வாக அகற்றப்பட வேண்டிய ரூபா 254,200 சீராக்கப்படாமையின் காரணமாக அப்பெறுமதியால் மிகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் பெறுமானத்தேய்வு பெறுமதியை அகற்றும் கணக்கிலும் பெறுமானத்தேய்வு ஒதுக்க கணக்கிலும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 30,092,938 ஆன மூலதன மானியத்தை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்களுக்கான பெறுமானத்தேய்வு வீதமான 10 சதவீதத்தின் கீழ் அந்த மூலதன மானியத்திற்காக 2021 ஆம் ஆண்டின் போது பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய பெறுமதி ரூபா 3,009,294 ஆகும். எனினும் விரிவான வருமானக் கூற்றில் வருமானத்தின் கீழ் மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றல்களாக ரூபா 1,979,610 தொகை மாத்திரமே காண்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்வாண்டில் ரூபா 1,029,684 வீதம் மிகை குறைத்தும் மூலதன மானியம் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 இன் இறுதிக் கணக்கில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் போது கிடைத்த மூலதன மானியமான ரூபா 30,092,938 இற்காக அந்த ஆண்டின் போது பெறுமானத்தேய்வு செய்ய முடியாதிருந்த போதும் ரூபா 5,817,662 பெறுமானத்தேய்வாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததால் அந்த தவறும் மீளாய்வாண்டின் போது சரி செய்யப்படாமையின் காரணமாக ரூபா 5,817,662 இனால் திரண்ட நிதிய மீதி அதிகரித்தும் மூலதன மானிய மீதி குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | கணக்கீட்டு கொள்கை இலக்கம் 3.5 இன் பிரகாரம் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் பெறுமானத்தேய்வு செய்யப்படாதிருந்தமை காண்பிக்கப்பட்ட போதும் 2020 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட லோடர் இயந்திரம் மற்றும் சாரதியுடனான புல்வெட்டும் இயந்திரம் என்பவற்றின் பெறுமதி ரூபா 6,181,000 இற்காக அது கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் ரூபா 309,050 ஆக மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு செய்து திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டதன் காரணமாக திரண்ட நிதியம் குறைத்தும் இயந்திர பெறுமானத்தேய்வு ஒதுக்கீட்டுக் கணக்கு அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | முன்னைய ஆண்டில் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யும் போது ரூபா 392,500 தொகையான பொருத்திகள் அலுவலக உபகரணங்களாக இனங்காணப்பட்டமையை சரி செய்வதற்காக உபகரணக் கணக்கிலிருந்து அகற்றி | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பொருத்திகள் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | சாரதியுடனான புல்வெட்டும் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 1,216,000 கடன்கொடுத்தோராக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த இயந்திரத்தின் உள்ளபடியான பெறுமதி ரூபா 994,500 ஆக இருந்தது. இதனை குறிப்பிடும் போது திரண்ட நிதியத்தில் வரவு வைத்து இயந்திரக் கணக்கில் செலவு வைத்ததன் காரணமாக ரூபா 221,500 இனால் கடன்கொடுத்தோர் மீதி அதிகரித்தும் திரண்ட நிதிய மீதி குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் கொள்வனவு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத, கடன்கொடுத்தோராக பட்டோலையில் காண்பிக்கப்பட்டு ரூபா 7,000,000 பெறுமதியான மின் பிறப்பாக்கி இயந்திரத்தை கொள்வனவு செய்தல், இயந்திர நடைமுறை வேலையாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் செலவினக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | 07 வருமான வகைகளின் 2020 சனவரி 01 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளில் காணப்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவுகளின் பெறுமதி 2020 ஆம் ஆண்டின் போது ஒவ்வொரு நிலுவை வருமானக் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கிலும் சீராக்குவதற்கு பதிலாக வேறுபாடான ரூபா 480,602 தொகை ஒதுக்க மற்றும் ஏற்பாட்டுக் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | ரூபா 213,600 இனால் கணனி இயந்திரங்களை மீள் மதிப்பீடு செய்யும் போது கணனி கணக்கில் வரவு வைத்து ஒதுக்க மற்றும் ஏற்பாட்டுக் கணக்கில் செலவு வைக்க வேண்டிய போதிலும் கணனி கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 11 கணக்கு விடயங்களுக்குரிய 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கூட்டுப்பெறுமதி ரூபா 2,428,249,496 மற்றும் உபயோக ஆவணங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 2,060,001,047 ஆனமையால் ரூபா 368,248,449 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் சரி செய்யப்படுகின்றது. | வேறுபாடுகளை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 37,299,020 ஆன 03 கணக்கு விடயங்களுக்காக பதிவேடுகள் / பட்டோலைகள் சமரப்பிக்காமையினால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் பட்டோலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பட்டோலைகளை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா

25,202,130 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 197,322,161 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி கணனி மென்பொருளின் பிரகாரம் ரூபா 41,977,493 தொகை, நிலுவை வருமான அறிக்கையில் ரூபா 42,319,900 மற்றும் காலப்பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 45,454,000 ஆக காணப்பட்டது. காலப்பகுப்பாய்வின் பிரகாரம் நிலுவை ஆதனவரி மீதி ரூபா 45,454,000 தொகையை ஒரு ஆண்டிற்கு குறைந்த 1 இற்கும் 2 வருடங்களுக்கும் இடையில், 2 இற்கும் 3 வருடங்களுக்கும் இடையில், 3 இற்கும் 5 வருடங்களுக்கும் இடையில், 5 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகள் முறையே ரூபா 6,413,398 தொகை, ரூபா 5,139,994 தொகை, ரூபா 1,379,566 தொகை, ரூபா 10,978,705 தொகை, ரூபா 9,753,711 தொகை மற்றும் ரூபா 11,788,626 ஆக இருந்ததுடன் அந்த மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | கணனி மென்பொருளின் மீதிக்கும் காலப்பகுப்பாய்வு மீதிக்கும் இடையிலான வேறுபாடு ரூபா 3,476,507 தொகை தொடர்பாக மென்பொருளுக்குரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தரவுகளுக்கு இடையே காணப்படுகின்ற வேறுபாடுகளை இனங்கண்டு சரியான நிலுவை ஆதனவரி மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2021 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையில் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட 25 தொலைத்தொடர்பு கோபுரங்களிலிருந்து ரூபா 75,000 நிலுவை தொலைத்தொடர்பு கோபுர வருமானம் அறவிட வேண்டிக் காணப்பட்டது. | பெறவேண்டிய ரூபா 75,000 இனை அறவிடுவதற்காக 2021 ஒக்தோபர் 12 மற்றும் 2022 பெப்ரவரி 21 ஆந் திகதிகளில் கடிதம் மூலம் அறிவித்தல் வழங்கி தொலைபேசி ஊடாக விசாரணை செய்து எதிர்வரும் இரண்டு | நிலுவை தொலைத் தொடர்பு கோபுர வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வாரங்களில் செலுத்தி தீர்ப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

### 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

--------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொறன சந்தியில் பொதுச் சந்தையில் 29 கடைகளில் 15 கடைகளுக்குரிய செல்லுபடியான உடன்படிக்கை காணப்படாதிருந்ததுடன் 11 இற்காக காணப்பட்ட உடன்படிக்கை 1998 ஆம் ஆண்டு முதல் 2005 இற்கு இடையிலான காலத்தில் முடிவடைந்திருந்த போதிலும் புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 2020 ஒக்தோபர் மாதம் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் இந்த கடைகளுக்காக புதிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கடை உரிமையாளர்களின் எதிர்ப்பு முன்வந்ததன் காரணமாக அதனை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து கிடைத்த புதிய மதிப்பீடு மாதாந்த வாடகையின் பிரகாரம் 2021 மார்ச் 01 ஆந் திகதி முதல் உடன்படிக்கை செய்வதற்கு வருகை தருமாறு கடை உரிமையாளர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. அதன் போது அவர்களின் எதிர்ப்பினை கவனத்தில் கொள்வதற்காக எதிர்ப்பு விசாரணையொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து 2022 பெப்ரவரி 25 ஆந் திகதி கோரிக்கை விடப்பட்டிருந்தது. | செல்லுபடியான உடன்படிக்கையுடன் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கிரிபத்கொட பொதுச் சந்தையில் 151 கடைகளில் 15 கடைகளுக்கான செல்லுபடியான உடன்படிக்கை காணப்படாதிருந்ததுடன் 67 கடைகளின் உடன்படிக்கை காலம் 1980 முதல் 1990 வரையான காலத்திற்கு இடையில், 40 கடைகள் 1991 முதல் 2000 வரையான | இந்த கடைகள் நீண்ட கால வாடகைக்கு வழங்கப்பட்டதன் கடைகளாக இருந்ததுடன் அந்த கடைகளில் ஆரம்ப வாடகையாளர் காணப்படவில்லை. உப வாடகைக்கு கையளிப்பதற்கு வழங்கப்பட்ட காலத்தை திருத்தி கொள்வதற்கு | செல்லுபடி உடன்படிக்கையுடன் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலத்திற்கு இடையில், 03 கடைகள் 2001 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு இடையிலும் காலாவதியாகியிருந்தது. அந்த கடைகளை நீண்ட கால அடிப்படையில் வாடகைக்கு வழங்கியமையால் ஆரம்ப வாடகையாளர்கள் இல்லாமை, மற்றும் உப வாடகைக்கு வழங்கியதன் காரணமாக புதிய உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | உதவி உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பரிந்துரை செய்து உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2020 திசெம்பர் 03 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் LGD/13/2016 இன் பிரகாரம் உப வாடகைக்கு கையளித்தல் தொடர்பாக சபையினால் தீர்மானம் எடுக்க வேண்டியமை குறிப்பிடப்பட்டிருந்த மையால் எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | திணைக்களத்தினால் கிரிபத்கொட புதிய சந்தைத் தொகுதியில் 2018 ஒக்தோபர் மாதத்திலும், குனுபிட்டிய புதிய சந்தைத் தொகுதியின் கடைகளுக்காக 2018 யூன் மாதமும் புதிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 20 கடைகள் உடன்படிக்கை முடிவடைந்திருந்த போதிலும் புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | புதிய மாதாந்த மதிப்பீட்டை வழங்குமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடப்பட்டிருந்தது. | செல்லுபடியான உடன்படிக்கையுடன் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1)(ஆ) பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய வீதிகள் தொடர்பாக மெய்மையாய்வு செய்து சபையின் உரித்திற்கு கையேற்று கணக்கீடு செய்வதற்கும் ஆவணங்களுக்கு கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்ட 09 வீதிகளின் அளவிடுவதற்காக அளவீட்டாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள துடன் அந்த திட்டத்தை பெற்று உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்காக ரூபா 50 மில்லியன் செலவினம் ஒன்றில் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலவிட்டிருந்ததுடன் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறாமல் கூட்டுப்பசளைத் | இந்த ஆண்டின் போது சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக உள்ளது என மத்திய சுற்றாடல் அதிகார சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்று கூட்டுப் பசளை தளம் மற்றும் கழிவுப் பொருள் தளத்தை நடாத்திச் செல்வதற்கு |

| | | |
|---|---|---|
| தளத்தை உள்ளடக்கிய கழிவுப்பொருள் தளமொன்று பேணிச் செல்லப்பட்டிருந்தது. கூட்டுப்பசளை உற்பத்தியின் இடையே விளைவாக leachate மீள் விளைவு முறைமையை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் காணப்படுகின்ற 2010 ஆம் ஆண்டின் போது சபை நிதியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 12,654,144 பெறுமதியான PC எக்சவேக்டர், 2015 ஆம் ஆண்டின் போது உள்ளூராட்சி மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மானியமாக கிடைத்த 8 தொன் கல் உருளை மற்றும் 2016 ஆம் ஆண்டின் போது உள்ளூராட்சி அமைச்சிலிருந்து மானியமாக கிடைத்த பாச்சி இயந்திரம் என்பன 04 வருடங்கள் முதல் 07 வருடங்கள் வரையான காலத்தில் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அவற்றை பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய 03 இயந்திரங்கள் மில்லனிய சபைத் தலைவரால் பரீட்சித்து மாற்றிக் கொள்வதற்கு பொருத்தமானதாக உள்ளது என அவதானிக்கப்பட்டிருந்தது. PC 50 எக்சவேட்டர் இயந்திரம் 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற விற்றுத்தீர்த்தல் நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஆகக்கூடிய கேள்வி சமர்ப்பித்த நபரால் பணம் செலுத்தி அது விடுவிக்கப்பட்டிருக்க வில்லை. | பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது முறையான பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை | | |
| சபைக்குச் சொந்தமான காணிகளுக்கிடையே காணிகள், மயான நிலங்கள் மற்றும் 13 குளிக்கும் கிணறுகள் என்பவற்றின் பரப்பளவை கண்டறிய முடியாதிருந்தது. | காணிகளை அளவிடுவதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | இனங்காணப்படாத காணிகளை இனங்கண்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) உரித்து உறுதிப்படுத்தப்படாத சொத்துக்கள் | | |
| சபைக்குச் சொந்தமான காணிகளில் 64 காணிகளுக்காக நிலவரைபடமும், 80 காணிகளுக்காக உரித்துறுதியும் காணப்படாமையினால் காணிகள் தொடர்பான தீர்த்தல் உரித்து உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2020 மற்றும் 2021 இன் பொருள் மெய்மையாய்வு பரிந்துரைகளில் இதுவரையில் நிலையான சொத்து பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ள சகல ஆதனங்களுக்காகவும் நில வரைபடம் மற்றும் வெளியீட்டு உரித்துறுதி தயாரித்து அனுப்பப்பட்டு முடிவடைந்துள்ளது. | காணிகளின் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) சிறில் மத்யூ விளையாட்டரங்கின் ஒரு பகுதியை உதைப்பந்தாட்ட சம்மேளனத்திற்கு வாடகைக்கு வழங்குதல் | | |
| 2006 மார்ச் 07 ஆந் திகதி இலங்கை காற்பந்தாட்ட சம்மேளனத்திற்கு வருடாந்தம் ரூபா 1,000 தொகையில் பேயரளவில் வாடகையின் அடிப்படையில் உடன்படிக்கையின்றி கையளித்தல் சான்றிதழ் மூலம் 33 வருடங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்காக 2018 ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் வாடகை செலுத்தப்படாதிருந்ததுடன் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 19,000,000 | இது தொடர்பாக தேவையான சட்டரீதியான ஆலோசனைகளை பெற்று அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | வாடகை உடன்படிக்கையின் மூலம் கையளிப்பதற்கும், நிலுவை வாடகையை அறவிடுவதற்கும் மற்றும் காணியின் மதிப்பீட்டு செலவினம் காற்பந்தாட்ட சம்மேளனத் திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| மற்றும் மதிப்பீட்டு செலவினமான ரூபா 89,750 தொகை காற்பந்தாட்ட சம்மேளனத்திலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு மீளாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1)(ஆ) பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய வீதிகள் தொடர்பாக மெய்மையாய்வு செய்து சபை உரித்திற்கு கையேற்று கணக்கீடு செய்வதற்கும் ஆவணங்களுக்கு கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்ட 09 வீதிகளில் அளவிடுவதற்காக அளவீட்டாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் அந்த திட்டத்தை பெற்று உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஊழியர் கடன் பட்டோலையின் பிரகாரம் இடமாற்றலாகிச் சென்ற, மரணமடைந்த, சேவையை விட்டுச் சென்ற, ஓய்வுபெற்றுச் சென்ற மற்றும் சேவை முடிவுறுத்தப்பட்ட 16 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதி ரூபா 880,312 ஆகும். | கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |